# வெண்டன் முரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

meet your friends for lunch, afternoon tea, or a quick cup!

PURE, UNBLENDED CEYLON TEAS FROM DIMBULA, UVA, NUWARA ELIYA AND KANDY ARE ON SALE IN QUARTER lb CARTONS AND ONE lb GIFT PACKS. THE IDEAL PRESENT ALL THE YEAR ROUND.

CEYLON

Ceylon Puts The Flavour in Tea

CEYLON TEA CENTRE
22 (LOWER) REGENT STREET
LONDON S.W.1.

LAWNFORD LTD.

LEADERS IN QUALITY FASHION FABRICS

DIRECT IMPORTERS, EXPORTERS,
WHOLESALERS AND RETAILERS.
LARGE STOCKISTS OF:
JAPANESE PLAIN AND PRINTED NYLON GEORGETTE SAREES AND LUREX BROCADES.
SPECIALISTS IN ENGLISH CURTAIN MATERIALS
ALL THESE AND MANY MORE VARIETIES AVAILABLE AT MOST KEENEST PRICES.

VISIT US AT
COMMERCE AND INDUSTRY HOUSE
31 MIDDLESEX STREET
ALDGATE, LONDON, E1 7AA
Tel.: 01-247 7129 Cables: YAULEE, LONDON, S.W.19
SITUATED IN THE WORLD FAMOUS PETTICOAT LANE MARKET AREA
UNDERGROUND STATIONS:
ALDGATE, ALDGATE EAST, LIVERPOOL STREET
WAREHOUSE AT 171 ARTHUR ROAD, WIMBLEDON PARK, LONDON, S.W.19
Tel.: 01-946 6914


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் முரசு

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை

— பாரதிதாசன்

முரசு 3 ஐப்பசி திருவள்ளுவர் ஆண்டு 2003 அக்டோபர் 15,1972 ஒலி 7


| | | | |
|---|---|---|---|
| ஆசிரியருரை | 2 | ஷாதிர் ஷா | 16 |
| தாய்நாடுகளின் செய்திகள் | 3 | மணிவிழா காணும் இணையிலா துணைவேந்து | 19 |
| கவிதை | 6 | கவிதை | 20 |
| சிறப்புநாட்குறிப்பு | 8 | அன்புள்ள ஆசிரியருக்கு | 21 |
| மேற்குநாடுகளின் செய்திகள் | 9 | TAMIL, TAMILS & THE TAMIL LANDS | 23 |
| வருவாய் என நான் — தனிமையில் நின்றேன் | 11 | FINAL EXAMS | 25 |
| | | NEWSGRAM | 26 |
| நிழற்படத்தில் செய்திகள் | 14 | CLASSIFIED ADVERTISEMENTS | 28 |



கௌரவ பொறுப்பாசிரியர்

ச ம சதானந்தன் B.Sc(Econ)(Lond).

கௌரவ உதவியாளர்கள் : ஜே வீ ஆனந்தராஜா
க ஜெகதீசுவரன்
சி சிவசோதி

கௌரவ நிருபர்/பிரதிநிதிகள்

தமிழ்நாடு : டி செல்வராஜன்

மலேசியா, சிங்கை : பொன் பாலகோபால் B.A., B.L.

கேரளா : எஸ் எஸ் மணி B.Com.

மைசூர் : ஆர் கண்ணன் B.A., B.O.L., B.T.

பிரான்சு : ஜமாலுதின் M.P.E.

மேற்கு நாடுகளின் முதன்முதல் தமிழ்த்திங்கள் ஏடு
இலாப நோக்கின்றி நடத்தப்படும் பிரசுரம்
லண்டன் முரசு பிரசுரத்தால் வெளியிடப்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுத் தமிழர்களை ஒன்றுசேர்ப்போம்

தமிழகத்திற்கும், ஈழத் தமிழகத்திற்கும் வெளியே லட்சக் கணக்கில் தமிழர்கள் பல நாடுகளில் குடியேறி நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். மலேசியா, சிங்கப்பூர், தென்னபிரிக்கா, மொரீஷியஸ், பீஜி, இங்கிலாந்து, பிரான்சு, டிரினிடாட், கயானா, அமெரிக்கா, கனடா நாடுகளில் தற்போதுள்ள தமிழர்கள் தொகை பதினைந்து லட்சங் களைத் தாண்டியுள்ளது. இதைவிட வேறு பல நாடுகளிலும் தமிழர்கள் கல்வி—தொழில் விடயமாகச் சென்றுள்ளனர். வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள் அனைவரும் அந்தந்த நாடுகளைத் தமதாக்கி குடிமக்களாக இருந்துவருகின்றனர். எனினும் சிறுபான்மையினர் என்ற முறையிலும், தமிழ் மாநிலங்களிலிருந்து அதிக தூரத்தே இருப்பதாலும் தங்கள் மொழி, கலை, கலாச்சாரம் இவற்றை நல்ல முறையில் கடைப்பிடிக்க இடையூறுகள் பல ஏற்படலாம். பல நாடுகளில் குடியேறி யுள்ள தமிழர்கள் பெயரளவில்தான் தமிழர்களாக இருப்பதையும் காண்கின்றோம். தமிழர்கள் தமிழ் மொழி, தமிழ்க் கலை ஆகியவற்றில் சிறந்து விளங்கவேண்டும். பல நாடுகளிலுமுள்ள தமிழர்கள் அனைவரும் ஒன்றுக இணைந்து செயல் ஆற்றல் வேண்டும்.

இவற்றையெல்லாம் நல்லமுறையில் இயங்கவைப்பதற்கு இதுவரை எந்த ஒரு அமைப்போ, இயக்கமோ ஏற் படாமைகண்டு வருந்துகின்றோம். இந்தத் தற்காலிகக் குறையை நீக்க 'லண்டன் முரசு' முன்வந்துள்ளது என்பதை மகிழ் வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். உலகத் தமிழர்களுக்கு ஒரு பாதுகாப்புக் கழகம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்து அண்மையில் தெரிவிக்கப் பட்டிருந்தது. அப்படி ஒரு இயக்கம் ஏற்படவும் 'முரசு' தன்னாலானதைச் செய்ய முன் வருகின்றது.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் தொடர்புகளைப் பலப்படுத்தவும் அவர்களது குரலை உலகுக்கும், தமிழ் நாட்டினருக்குமீ எடுத்துரைக்கும் பணியில் இனி 'முரசு' கூடியளவு பங்கு கொள்ளும். இந்த உயர்ந்த முயற்சியில் வெளிநாட்டுத் தமிழர்களும் தமிழ் மாநிலத் தமிழர்களும் முழு ஆதரவு அளிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் நாடுகளின் செய்திகள்

## தமிழரசுத் தந்தை செல்வா பதவி துறந்தார்!!
## சிங்கள அரசாங்கத்திற்கு நேரடி சவால்!

ஈழத் தமிழர்களின் தன்னிகரில்லாத் தந்தையும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான திரு செல்வநாயகம் அவர்கள் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினமாச் செய்துள்ளார். இதைச் செய்தபொழுது அரசாங்கத்திற்கு ஒரு நேரடிச் சவாலும் விட்டுள்ளார் அவர்.

"நான் எனது பதவியை துறக்கிறேன். அரசாங்கம் மறுபடியும் இந்தத் தொகுதியில் தேர்தல் நடத்தட்டும். அப் பொழுது தமிழர் கூட்டணியின் சார்பில் நான் மறுபடியும் இங்கு போட்டியிடுவேன். என்னை யாராவது எதிர்த்துநின்று வெற்றி பெற்றுவிட்டால் அதன்பிறகு தமிழர்கள் தங்கள் உரிமைக்காக என்றுமே போராட மாட்டார்கள். புதிய அரசியல் சட்டத்தைக் கூட அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், நான் வெற்றி பெற்றால், அது தமிழர்கள் அரசியல் சட்டத்தை விரும்பவில்லையென் பதுதான். இதை சிங்கள அரசாங்கத்திற்கு தெரியப் படுத்துகிறேன்." என்று தந்தை செல்வா அவர்கள் சவால் விட்டு, தனது காங்கேசன்துறை தொகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமாச் செய்துள்ளார்.

இதன் எதிரொலிப்பாக தமிழ் இளைஞர் மாணவர் பேரணி ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளது. அதிலே காணப்படுவதாவது:

"தந்தையின் செயலால் சொந்த மண்ணிற் பேரெழுச்சி கொண்டோம் — மகிழ்வுற்றோம். தாய்த் தமிழ கத்தார்—தரணிவாழ் தமிழரெல்லாம், இனி ஒரு விதி செய்வோம். உலகம் நோக்கும், ஈழத்தமிழினத்தின் தலைமகனைத்—தந்தை செல்வாவை, போட்டியின்றி மீட்சிமன்றம் அனுப்புவோம். பொறுமையிலே போட்டிக்கு யாருமிருப்பின், அவர் என்றுமில்லை—இளை ஞர் நாவளமுண்டு, கையிலே வாக்குப் பலமுண்டு—நேர்மைத் திறனுண்டு—வெற்றித்தோள் வலிமையுண்டு. இளைஞர் எல்லாம் அணி அணியாய்க் கூடுவோம் தந்தை தொகுதியிலே—போர் மூட்டுவோம். வெற்றிவாகை சூட்டுவோம் என்று குறுரைப்போம்— இரத்தத் திலகமிட்டோம். தந்தை வாழ்க."

வாழ்க தமிழ்மொழி — வாழ்க ஈழத்தமிழகம்.

## "அறக் காவலர் குழு"வில் அரிஜனங்கள்!
## தமிழ்நாட்டில் சட்டம் நிறைவேறியது.

மூன்றுக்கு @ 20 மூயிரத்திற்குமேல் வருமானமுள்ள கோவில்களுக்கு பரம்பரை அறக்காவலர்(Trustee) யாரும் இல்லாவிட்டால், இந்துசமய அறநிலைய கமிஷனர் 3 பேரிலிருந்து 5 பேர் வரை ஒரு அறக்குழுவை நியமிக்கலாம் என்பது தெரிந்ததே.

இதுவரை இப்படி நியமிக்கப்பட்ட குழுக்களில் அரிஜனங்கள் மிகவும் குறைந்த அளவிலேயே இடம்பெற்றிருந்தார்கள் இப்பொழுது தமிழ்நாட்டு சட்டசபையில் இதற்கான சட்டம் ஒன்று நிறைவேற்றப் பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்படி, இனிமேல் நியமிக்கப்படும் அறக்காவலர் குழுவில் அரிஜனங்களில் ஒருவர் கண்டிப்பாக நியமிக்கப்பட வேண்டும்.

இந்த திருத்த மசோதாவை தமிழ்நாடு அறநிலைய அமைச்சர் திரு கண்ணப்பன் அவர்கள் தாக்கல் செய்தார் பொதுவாக எல்லா கட்சிப் பிரமுகர்களும் மசோதாவை ஆதரித்துப் பேசினர்கள். விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசிய திரு கண்ணப்பன் அவர்கள் பின்வருமாறு கூறினர்கள்:

"அரிஜனங்களை மற்ற சமுதாயத்தினரும் மதிக்கவேண்டும் என்ற அடிப் படையில்தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது. சட்டம் இல்லாமலேயே இதைச் செய்யக்கூடாதா என்று கேட்கலாம். நிரந்தரமான பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகவே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது" என்றார்.

## கர்நாடக சங்கீதமா...? பரத நாட்டியமா...?
## சிங்களம் தெரிந்திருப்பவர்கள் மட்டும்தான் போதிக்கலாம்!!

18.8.1972 அன்று வெளியான அரசாங்க வர்த்தமானியில் சங்கீதக் கல்லூரியில் வேலை வாய்ப்புக்கள் இருப்ப தாகவும், கர்நாடக சங்கீத போதனாசிரியர்/உதவி விரிவுரையாளர் பதவிகளுக்கும், அரசாங்க நடனக் கல்லூரியில் பரத, கத களி நாட்டிய உதவி விரிவுரையாளர்/போதனாசிரியர் பதவிகளுக்கும் கல்வி அமைச்சிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு இருந்தன.

விண்ணப்பதாரர்கள் தமிழில் கற்பிக்கக்கூடிய ஆற்றல் பெற்றிருத்தல் அவசியம் என்றும், அல்லது சிங்களம் பேச, எழுத தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென்றும், இந்தப் பதவிகளுக்கு தெரியப்படுபவர்கள் 1956ம் ஆண்டுச் சிங்களம் மட்டும் சட்டத்தைச் செயற்படுத்துவதற்கான விதிகளுக்கு ஒழுகவேண்டும் என்றும் விதிக்கப் பட்டுள்ளது.

"இது ஏன்? கர்நாடக சங்கீதத்தையும், பரதநாட்டியத்தையும்—அதுவும் தமிழில்—கற்பிப்பவர்களுக்குச் சிங்களத்தகுமை எதற்காக? தமிழர் இந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகள் என்பதை நிலைநாட்டுவதற்கு இந்த நிபந்தனையா? வயிற்றுப் பிழைப்புக்காக எல்லோரையும் சிங்களம் கற்கவைக்கும் சூழ்ச்சியா?

இந்த இலட்சனத்தில் நாளைக்குச் சிங்களந் தெரிந்தவருக்குத்தான் பங்கீட்டரிசி, கல்வி, வைத்திய வசதிகள் என்று விதிக்கப்பட்டாலும் ஆச்சரியமிராது!

'நமக்கொரு நாட்டின்' அவசியத்தை, அவசரத்தை இவை எமக்கு இடித்துக் கூறுகின்றன." இப்படி கூறியிருக்கிறது ஈழத்தின் பிரதான தமிழ்ப் பத்திரிகை ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர் சமுதாயம் பதில் கூறுமா?

'பிளேய்ன் ட்ருத்' (PLAIN TRUTH) என்னும் ஆங்கில சஞ்சிகையின் ஜூன் மாத இதழில் "அயர்லாந்து பற்றிய உண்மை" (The Truth About Ireland) என்ற கட்டுரை வெளியாகியிருந்தது. இந்தக் கட்டுரையில் தற்சமயம் அயர்லாந்தில் நடைபெறுகின்ற குழப்பங்களுக்கான உண்மைகளை மிகத் தெளிவாக விளக்கியிருந்தார் கட்டுரை ஆசிரியர். இதன்படி, "வட-அயர்லாந்தில் தற்போது வாழும் 'புரோட்டஸ்டன்ஸ்' (Protestants) மக்கள் உண்மையில் ஐரிஷ் மக்கள் அல்ல. அவர்கள் வட-அயர்லாந்தில் குடியேற்றப்பட்ட ஆங்கிலேய, ஸ்கொட்டிஸ் மக்கள்தான். ஆகவே மதத்தால் மட்டுமல்ல; இனத்தால் கூட வட-அயர்லாந்தில் வாழ்பவர்கள் மாறுபட்டிருக்கிறார்கள். இதனால்தான் குழப்பங்கள் நடைபெறுகின்றன. இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் முன்னைய ஆங்கிலேய மன்னனை ஜேம்ஸ் (1608) கடைப்பிடித்த கட்டாயக் குடியேற்றம்தான் காரணம்" என்று இந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(தமிழ்) ஈழமும் ஒரு காலத்தில் இந்த நிலைக்கு வந்தாலும் வரலாம் என்ற பயத்தை ஈழத்தில் இருந்து வெளிவரும் 'விதை' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. அது மேலும் இதைப்பற்றிக் கூறியிருப்பதாவது:

"சிங்கள் ஏகாதிபத்திய வாதிகள் ஈழத்தில் தமிழர் பிரச்சனையைத் தீர்க்க, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறார்கள் என்பதைக் கண் கூடாகக் காண முடிகிறது. ஈழத் தமிழ் மக்களின் பரம்பரைத் தாயகத்தின் தொடர்ச்சியைத் துண்டிக்க, அல்லை, கந்தளாய், பதவியா ஆகிய சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கியும், திருகோணமலைப் பிரதேசத்தைச் சிங்களப் பிரதேசமாக்கி (தமிழ்) ஈழத்தைப் பிரிக்க முனைந்தும், கல்லோயாத் திட்டத்தால் எமது பிரதேசத்தின் தென் பகுதியைப் பறித்தும், மீனவர், விவசாய குடியேற்றத் திட்டங்களால் ஆங்காங்கே சிங்களப் பகுதிகளை உருவாக்கித் தமிழர் பிரதேசத்தைச் சுருக்கியாடி வருவதையும் காணமுடிகிறது.

ஆங்கில ஏகாதிபத்தியம் தனது திட்டமிட்ட ஆங்கில, ஸ்கொட்டிஸ் குடியேற்றத்தால் நூற்றாண்டுகள் பல சென்றும் ஐரிஷ் பிரச்சனையைத் தீர்க்க முடியாமல், இன்று தோல்வியை ஒப்புக் கொள்ளும் நிலையில் இருக்கிறது. இங்கு சிங்கள ஏகாதிபத்தியம் தனது சிங்களக் குடியேற்றச் சூழ்ச்சியில் வெற்றி பெறுமா? இளைஞர் சமுதாயம்தான் இதற்குப் பதில் கூறவேண்டும்."

## "உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கபட வேண்டும்"

## தமிழக அரசு ஆலோசிக்கிறது!

"உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்க சட்டம் கொண்டு வருவதற்கான பரிசீலனையில் தமிழக அரசு ஈடுபட்டிருக்கிறது." என்று அமைச்சர் திரு ப.உ.சண்முகம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதைப்பற்றிய கருத்துக்களை வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறுகையில் "20 ஆண்டு நிலவரி தந்து விட்டால் நிலத்தீர்வை கட்டத் தேவையில்லை என்ற சட்டம் ஏற்கனவே இருக்கிறது. அப்படிப்பட்ட நிலத்தை விற்று இருந்தால் அதை வாங்கியவருக்குத்தான் நிலம் சொந்தமாகும்"

"இந்தச் சட்டத்தில் எப்படி எப்படி திருத்தம் கொண்டு வரலாம் என்பது பற்றி ஆராய்ந்து சட்டம் கொண்டு வரப்போகிறது அரசாங்கம்" என்றும் திரு சண்முகம் அவர்கள் கூறினார்.

## தமிழர் கூட்டணியினரின் மாபெரும் கூட்டம்!

## தந்தை செல்வாவிற்கு இரத்தத் திலகம்!!

அக்டோபர் 2ம் தேதியன்று ஈழத்தில் தமிழர் கூட்டணியின் சுதந்திரப் போராட்டம் ஆரம்பமாகியது. இதற்கு முன்னோடியாக செப்டம்பர் 30ம் தேதியன்று யாழ் கோட்டை மைதானத்தில் ஓர் மாபெரும் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. 'எள் போட்டால் எண்ணெயாக வந்திருக்கும்' என்கிற அளவிற்கு கூட்டம் அலை மோதியது என்று தெரியவருகிறது.

வழமையாக பலவீனமான குரலில் பேசும் தந்தை செல்வநாயகம் அவர்களை அன்று உணர்ச்சிவசப்பட்டு மிக உரத்த குரலில் பேசினார். "புதிய அரசியல் திட்டத்தைத் தமிழ்மக்கள் ஆதரிக்கவில்லை என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டு முகமாக எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கிறேன்" என்று தந்தை செல்வா கூறியதும் கரகோஷம் வானைப் பிளந்தது. தந்தையவர்கள் மேடையில் பேசத் தொடங்கியதும் இளைஞர்கள் திரளாகவந்து தந்தையின் நெற்றியில் தங்கள் கை பெருவிரலைக் கிழித்து இரத்தத் திலகம் இட்டு அவர் பாதம் பணிந்து உறுதியிட்டார்கள்.

ஆண்களும், பெண்களும், பெரியவரும், சிறியவருமாய் குவிந்திருந்த இக்கூட்ட வைபவத்தில் 'உதயசூரியன்' பிரகாசிக்கும் தமிழர் கூட்டணியினரின் கொடி ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தமிழ்த் தேசிய கீதம் பாடினார்கள். திருவாளர்கள் ஜெயக்கொடி, தர்மலிங்கம், சிவநேசன், துரைரத்தினம், நவரத்தினம் ஆகியோரும் இக்கூட்டத்தில் வீராவேசமாக உரையாற்றினார்கள். திரு சிவநேசன் அவர்கள் பேசும்போது "எமது உரிமைக்குரலை நசுக்கி விடலாம் என்று அரசினர் நினைக்கலாம். இது உள்நாட்டுப் பிரச்சனை என்று பிறநாடுகள் நினைக்கலாம். ஆனால் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் எல்லாம் எமக்காகத் துடிப்பார்கள்—கொதித்தெழுவார்கள்—குரல்கொடுப்பார்கள். அவர்களுக்கும் இது பிரச்சனைதான் என்பதை மறக்கவேண்டாம்" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# £15,000 TAX FREE CASH FOR YOU

You will also receive Free Premium Bonds with chances to win up to £50,000 every month if you invest through me. You can secure your future and protect your family with £7,500 of life cover for £6* per month. This unique way of investing in property has many other benefits. Or you can draw up to 6% tax free income from your capital investment. My advice is Free. ACT NOW.

*Variable with age.

To:—Billy Loh (Investment & Life Assurance Consultant),
127 West End Lane,
London, N.W.6. Tel. 01-624 4697 (Day and Night).

I am interested to know more about:—

1. Investment/Life Assurance Plan ☐ 2. Capital Investment ☐
3. Mortgage Facilities ☐ 4. Estate Duty Plan ☐
5. Self-Employed and/or Company Pension Plan ☐

Mr./Mrs./Miss .....
Address ..... Age next birthday .....
..... Tel. Home .....
..... Office .....
..... Profession .....

MALAYSIA & SINGAPORE
Restaurant

Open from,
11 a.m-3 P.m
6 P.m-11 P.m

Exquisite-South Indian & Malaysian Dishes.
DHOSAI-MASALA DHOSAI -SAMBAR,
RICE & CURRY, ETC..

20. CHILDS STREET., EARLS COURT
LONDON S.W.5. (01-370 2445)

Nearest tube
Earls Court.

## Trident Arts International

When you want to travel please think of TRIDENT ARTS INTERNATIONAL, we can offer you the most competetive prices to:

**INDIA, DACCA, HONG KONG, SINGAPORE, AUSTRALIA, CANADA, NEW YORK AND ALL OTHER PARTS OF THE WORLD IN OUR JET FLIGHTS.**

For further informations please write or telephone:

318 Hoe Street,
London, E.17.
Tel.: 01-520 7911

City Office:
18 York Way,
London, N.1.
Tel. 01-278 1138
01-873 2711

In India:
Trans-Continental Travel Tours,
202 Jolly Bhavan 1,
10 New Marine Line,
Bombay—20.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்நாட்டில் சம்பளம் உயர்த்தப் படுகிறது

தமிழ்நாட்டின் அரசாங்க குமாஸ்தாக்கள், பட்டதாரி ஆசிரியர்கள், கிராம அதிகாரிகள் ஆகியோருடைய சம்பளங் கள் உயர்த்தப் பட்டுள்ளது. இந்தத் தகவலை சமீபத்தில் முதல் அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் சட்டசபையில் அறிவித்தார். இந்த அறிவித்தலைக் கேட்டவுடன் உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

செப்டம்பர் 1ம் தேதி அமுலுக்கு வந்த இந்தச் சம்பள உயர்வின் காரணமாக ஏறத்தாழ 1,36,800 ஊழி யர்கள் பயன் அடைவார்கள் எனத் தெரிய வருகிறது. இந்தப் பட்டியலில் குமாஸ்தாக்கள், பட்டதாரி ஆசிரியர்கள், கிராம அதி காரிகள், ஐ னியர் இளம் என்ஜினியர்கள், கால்நடை வைத்தியர்கள் போன்ற பலர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

## சிதறிய செய்திகள்

★★★ மறைந்த தமிழக முதல்வர் அண்ணாவின் 64 வது பிறந்தநாள் விழா தமிழ்நாடு முழுவதிலும் சென்றமாதம் 15 ம் தேதியன்று கொண்டாடப்பட்டது. திருநெல்வேலி நகரில் அண்ணாவின் சிலையை, முதலமைச்சர் கருணாநிதி திறந்து வைத்தார். பல்வேறு நகரங்களில் நடைபெற்ற விழாக்களில் அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

★★★ ருமேனியா, ஹங்கேரி, செக்கஸ்லோவேக்கியா ஆகிய நாடுகளுக்கு இந்திய அரசு ஒரு கலைக்குழுவை இம்மாதம் அனுப்புகிறது. பரத நாட்டியக் கலைஞர் திருமதி கிருஷ்ணவேணி லட்சுமணன், சிதார் கலைஞர் உஸ்தாத் அப்துல் ஹலீம் ஆகியோர் செல்கின்றனர்.

★★★ கேரளத்தில் சோவியத் பாணியில் கூட்டுப் பண்ணைகளை அமைக்க மாநில அரசு உத்தேசித்திருக்கிறது. எர்ணா குளம் மாவட்டத்திலுள்ள இல்லிதோடு பகுதியில் இது அமையும்.

★★★ ராஜ ராஜ சோழன் படத்தில் பழைய நடிகர் டி. ஆர். மஹாலிங்கமும் சீர்காழி கோவிந்தராஜனும் நடிக்கின் றனர். எல். வரலட்சுமி குந்தவியாகத் தோன்றுகிறார். குன்னக்குடி வைத்தியநாதன் இசையமைக்க கண்ணதாசன் பாடல்களை இயற்றுகிறார்.

★★★ கல்கத்தாவில் அருண்குமார் என்ற தமிழ் இளைஞர் 245 மணி நேரம் இடைவிடாமல் சைக்கிள் சவாரி செய் துள்ளார்.

★★★ தஞ்சை மாவட்டத்தில் ஒன்றேகால் லட்சம் பேருக்கு வீட்டுமனை பட்டாக்களை முதலமைச்சர் கருணாநிதி வழங்கி யுள்ளார்.

★★★ திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சி நிலையிலும் தாமிரவருணி வடிநிலப் பகுதியில் சுமார் 20,000 ஏக்கர் நெற்பயிர் பாதிக்கப் பட்டிருக்கிறது.

★★★ அகில இந்திய புகைப்பட போட்டியில் திரு. ஆர். ஜி. நடேசன் அவர்கள் 1972 க்கான முதல்பரிசு ரூ1000த்தை பெற்றுள்ளார். 1971ல் இரண்டாவது பரிசான ரூ600ஐ இவர் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

★★★ இந்திய வெப்ப மண்டல வானிலை ஆராய்ச்சி நிலையம் சென்னையிலும் பூனாவிலும் செயற்கை மழையைப் பொழி விக்க அடுத்த மாதம் சோதனை நடத்த இருக்கிறது. விமானங்களும் ஜெனரேடர்களும் இதற்குப் பயன் படுத்தப் படும்.

★★★ சூரியகாந்தி பயிரிடுவதின் மூலம் விவசாயிகள் நல்ல லாபம் பெறலாம் என்று இந்திய விவசாய ஆராய்ச்சி நிலை யத் தலைவர் திரு சுவாமிநாதன் தெரிவித்திருக்கிறார். சூரியகாந்தி எண்ணெய் ருசி மிகுந்தது என்றார் அவர்.

★★★ முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் 85 வது பிறந்தநாளை சென்றமாதம் கொண்டாடினார். இவரது பிறந்தநாள் இந்தியா முழுவதிலும் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப் படுகிறது.

## புதுமைப்பெண்ணுக்கொரு புதுப்பாட்டு:

இயற்றியவர்! சீதாராம கிருஷ்ணமூர்த்தி, லண்டன் வ 11.

எடுப்பு:

நிமிர்ந்து நில்லடி பாவாய்
நீ நிமிர்ந்து

தொடுப்பு:

குனிந்து நின்ற நீ கும்மியடித்த
காலம் மறைந்தது கேளடி வார்த்தை (நிமி)

முடிப்பு:

முனிந்து வந்து முனிவரும் எங்கே
எரித்து வீடுவரோ எனத் தளராதே
கனிந்து உன் முன் மயக்கும் வார்த்தை
கூறினும் கயவர் பற்றி அஞ்சாதே (நிமி)

இனிமை பொங்க இதயம் திறந்து
இதோ எதிரில் கூறுவேன் கேளடி
தனிமை ஒழிந்தது தாழ்வு பறந்தது
தலையில் கிரீடம் சூடட வாடி. (நிமி)

Digitized by Noolaham Foundation.

TEL: 01 684 8437

TEL: 01 654 5446

# MOHAMEDS

## ORIENTAL GROCERS

267 LONDON ROAD
WEST CROYDON
SURREY

61 PORTLAND ROAD
SOUTH NORWOOD
LONDON. S.E.25

# THE AKBAR TANDOORI

**115 WESTBOURNE GROVE**
**LONDON, W.2**

We specialise in:—
TANDOORI CHICKEN
SHEEK KEBAB
CHICKEN & MUTTON TIKKA
NAN
AND CURRIES

For Reservation—
**Tel.: 727 8938/6416**

TAKE AWAY SERVICE
AND PARTIES CATERED FOR

Nearest Tube: Notting Hill Gate
Queensway
Bayswater

# HAREKRISNA CURRY-HOUSE

**2 HANWAY STREET**
**LONDON, W.1**
(Opp. Dominion Cinema)

**Telephone: 636 5262**

Specialities:—
RICE
PILAO
BHEL
BHAJIYA
PURI-SHAK
VEGETABLE CURRIES
CHEVDA
GULAB JAMBU
JALEBI
etc.

Outside Parties Catered For

**VEGETARIAN RESTAURANT**

Nearest Tube: Tottenham Court Road

# INDIAN NATIONAL TRAVELS LIMITED

At Your Service Since 1930

**LOWEST JET FARES to SINGAPORE.**

INDIA, CEYLON, MALAYSIA, FAR EAST,
AUSTRALIA, U.S.A. and CANADA.

PACKING SHIPPING and FORWARDING
EXPORT SHOPPING SERVICE

**25 BLOOMSBURY WAY, LONDON, W.C.1**
**Telephone: 01-405 1193**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திரைக்கு வந்தவை.

தமிழ்நாட்டில் என்னென்ன புதுத் திரைப்படங்கள் வெளிவருகின்றன? நடிகர்கள் யார்? தயாரிப்பாளர் யார்? டைரக்டர் யார்? கதை எத்தகையது? இவைகளை அறியும் ஆவல் மேற்குநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு இருக்கும் என்று நம் புகிறோம். அவர்களது ஆவலைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் இப்புதிய பகுதியை ஆரம்பித்திருக்கிறோம். நீங்கள் தொடரும் திரைக்கு வரும் புதிய படங்களைப்பற்றிய செய்திகள் இனி தொடர்ந்து வெளிவரும் என்று மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

| படம் | நடிகர்கள் | தயாரிப்பாளர் | டைரக்டர் |
|---|---|---|---|
| 1)வாழையடி வாழை | பிரமிளா, வரலட்சுமி, ஜெயசித்திரா. | சித்ரா புரடக்ஷன்ஸ் | கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் |

மூன்று புதுமுகங்களை வைத்து தயாரிக்கப் பட்டிருக்கும் இந்தப் படத்திற்கான இசையை குன்னக்குடி வைத்தியநாதன் அமைத்திருக்கிறார்.

2)தவப் புதல்வன் — சிவாஜி, விஜயா, பண்டரிபாய். — முக்தா பிலிம்ஸ் — எஸ்.சீனிவாசன்.

ஒரு இசைக் கலைஞனைப் பற்றிய இக் கதைக்கு எம்.எஸ்.விசுவநாதன் இசை அமைத்துள்ளார்.

3)பதிலுக்குப் பதில் — ராஜன், விஜயகுமாரி, முத்துராமன் — பாலன் பிக்சர்ஸ் — ஜம்பு

ஈஸ்மன் கலரில் தயாரிக்கப்பட்டிருக்கும் இப்படத்தில் எம்.ஆர்.ஆர்.வாசுவும் நடித்திருக்கின்றார்.)

4)எல்லைக்கோடு — ஜெமினி கணேசன், ராஜஸ்ரீ, ரவிச் சந்திரன், பாலய்யா, சுப்பையா. — சுவர்ணலட்சுமி பிலிம்ஸ் — ராகவன்

(செப்டம்பர் 2ந் தேதி வெளியாகிய இப்படத்திற்கு கே.வி.மகாதேவன் இசையமைத்துள்ளார்.)

5)வறலோ பார்ட்னர் — நாகேஷ், ஜயலலிதா, எம்.ஆர்.ஆர் வாசு, தேங்காய் சீனிவாசன், லீலா. — சித்திரமகால் — கிருஷ்ணமூர்த்தி

தாராபுரம் சுந்தரராஜன் முதல்முதல் இசையமைத்துள்ள இந்த நகைச்சுவைப் படத்தின் வசனங்களை பஞ்சு அருணாசலம் எழுதியுள்ளார்.

6)அன்னமிட்ட கை — பாரத் எம்.ஜி.ஆர், ஜயலலிதா, பாரதி, நம்பியார், மனோகர், நாகேஸ் — ராமச்சந்திரா பிலிம்ஸ் — எம்.கிருஷ்ணன்.

மனோரமா, வி.கே.ராமசாமி ஆகியோரும் நடித்துள்ள இப்படத்துக்கான பாடல்களை வாலி எழுத இசையமைப்பை கே.வி மகாதேவன் அமைத்திருக்கிறார். பாடுபட்டு உழைக்கும் ஒருவனுடைய வாழ்க்கையைச் சித்தரிக்கும் இப் படத்துக்கான வசனங்களை ஏ.எல்.நாராயணன் எழுதியிருக்கின்றார்.

# சிறப்புநாட்குறிப்பு

| மாதம் | நாள் | சிறப்பு | விடுமுறை |
|---|---|---|---|
| அக்டோபர் | 15 | துர்க்காஷ்டமி | — |
| அக்டோபர் | 16 | சரஸ்வதி / ஆயுத பூஜை | தமிழ் நாடு |
| அக்டோபர் | 17 | விஜய தசமி | தமிழ் நாடு |
| அக்டோபர் | 22 | பூரண தினம் (போயா) | இலங்கை |
| நவம்பர் | 4 | தீபாவளி | இந்தியா, இலங்கை மலேசியா |
| நவம்பர் | 5 | கேதார கௌரி விரதம் | — |
| நவம்பர் | 7 | ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம் | — |
| நவம்பர் | 8 | ரம்ஜான் | இந்தியா, இலங்கை மலேசியா |
| நவம்பர் | 9 | ரம்ஜான் | தமிழ் நாடு |
| நவம்பர் | 12 | ஸ்கந்தஷஷ்டி விரதம் (சூர சம்காரம்) | — |
| நவம்பர் | 20 | திருவண்ணாமலை தீபம் | — |
| நவம்பர் | 21 | விஷ்ணு தீபம் | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு நாடுகளின் செய்திகள்.

## டாக்டர் கோதண்டராமன் அவர்கட்கு பிரியாவிடை

லண்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதியில் விரிவுரையாளராகப் பணியாற்றிய டாக்டர் பொன் கோதண்டராமன் அவர்கள் செப்டம்பர் 25ந் தேதியன்று தமிழகம் திரும்பினர். பொற்கோ என அன்புடன் அழைக்கப் படும் டாக்டர் கோதண்டராமன் லண்டன் வாழ் தமிழர்களின் பெருமதிப்பிற்குப் பாத்திரமாய் விளங்கி வந்தார். லண்டன் முரசு ஏட்டில் கௌரவ ஆசிரியராக இருந்து முரசு ஏட்டின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக நின்றார். கருத்து வேற்றுமையால் பிளவுபட்டிருந்த லண்டன் தமிழ்ச் சங்கத்தை ஒன்றுபடுத்தி வெற்றியும் கண்டார். பொற்கோ அவர்கள் தமிழகம் திரும்பும் வேளையில் அவருக்கு பிரித்தானிய தமிழ்க் கலைக்கழகத்தின் சார்பில் சர்ரே, கிராய்டனில் உள்ள பாம்பு நிபுணர் திரு இராமலிங்கத்தின் இல்லமான தமிழ் அகத்தில் பாராட்டு விருந்து ஒன்று நடைபெற்றது. இவ்விருந்தில் கலைக்கழக உறுப்பினர்கள் பலரோடு லண்டன் தமிழ்ச் சங்கப் பொருளாளரும் சட்டமாணவருமான திரு செல்வநாயகம் அவர்களும், கிராய்டன் இனத்தொடர்புக் கழகத்தில் தொழிற் பணிக்குழுப் பிரதிநிதி திரு சுப்புசாமி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

செப்டம்பர் 21ந் தேதியன்று பொற்கோ அவர்கட்கு லண்டன் தமிழ்ச் சங்க செயற் குழுவினரால் ஸ்டிராண்டிலுள்ள இந்தியா கிளப்பில் பிரியாவிடை விருந்து ஒன்று அளிக்கப்பட்டது. லண்டன் முரசு செயலகக் குழுவினர் பலரும் மற்றும் பிரித்தானிய கலைக்கழக இயக்குனரும் பொற்கோ அவர்களுக்கு லண்டன் விமான நிலையம் சென்று பிரியாவிடை அளித்தமை குறிப்பிடத்தக்கது.

## பேராசிரியர் ஜி ஆர் தாமோதரன் ஜெர்மனி வருகை

கலைக்கதிர் ஆசிரியரும், கோவை பி எஸ் ஜி நிறுவனத்தின் நிர்வாகியுமான பேராசிரியர் ஜி.ஆர். தாமோதரன் அவர்கள் மியூனிக்கிற்கு வருகை தந்துள்ளார். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் தேசிய முகாமைத்துவர் சங்கங்களின் சர்வதேசக் கூட்டணியின் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் பங்கு கொள்ள ஜி.ஆர்.டி. ஜேர்மனி வந்துள்ளார்.

## தென்னப்பிரிக்கத் தமிழ் பிரமுகர் லண்டன் வருகை.

தென்னப்பிரிக்காவில் நேட்டாலிலுள்ள ஸ்பிங்கோ அருட்பாக் கழகத்தின் தலைவர் திருமதி.திருநாகவல்லி பிள்ளை அவர்கள் அண்மையில் லண்டனுக்கு வருகை தந்துள்ளார்கள். தமிழ் ஆர்வமிகு திருமதி பிள்ளை அவர்கள் நேட்டால் பகுதியில் அருட்பாக்கழக வளர்ச்சியில் மிகுந்த பங்கு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## லண்டன் தமிழ்ச் சங்கத்தின் தீபாவளிவிழா:

நவம்பர் மாதம் ஐந்தாம் தேதி ஞாயிறன்று மாலை 6.00 மணியளவில் லண்டனிலுள்ள இந்தியன் ஒய்.எம்.சி.ஏ. மகாத்மா காந்தி மண்டபத்தில் லண்டன் தமிழ்ச் சங்கத்தினரால் தீபாவளி திருநாள் கொண்டாடப்படவிருக்கிறது. விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு லண்டன் தமிழ்ச் சங்கச் செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார்.


தமிழ் பிலிம் & சோவுண்ட் கிளப்

அளிக்கும்

சிவாஜி கணேசன் * சௌகார் ஜானகி * நம்பியார் *

வெண்ணிற ஆடை நிர்மலா * வி.கே. ராமசாமி *

பாலாஜி * சுந்தரராஜன் * சோ *

நடித்த

# லக்ஷ்மி கல்யாணம்

இடம்: காமன்வெல்த் இன்ஸ்டிடூட், லண்டன் மே 8

தேதி: முதற்காட்சி – 13 அக்டோபர் வெள்ளிக் கிழமை மாலை 7 30.

2வதுகாட்சி – 21 அக்டோபர் சனிக் கிழமை மாலை 7 00.

சீட்டு: செயலாளர், தமிழ் பிலிம் & சோவுண்ட்கிளப் (01–228 8751; 01–228 2620; 01–228 1626)

– ADVT –


Digitized By Noolaham Foundation
www.noolaham.org | aavanaham.org

## திருமங்கலக்குடி பள்ளிக்கூடக்கட்டிடத்திற்கு லண்டன் தமிழர் நிதியுதவி.

கடந்த மாதம் 29ம் தேதி கும்பகோணம் வட்டத்திலுள்ள திருமங்கலக்குடி மாபெரும் விழாக் கோலம் பூண்டிருந்தது. தமிழகப் பிரமுகர்கள் திரு. கோ.சி.மணி எம்.எல்.சி., ஜனப் அப்துல் சமது எம்.பி,ஜனப் ஹாஜா மைதீன் எம்.பி., மாவட்டக் கல்வி அதிகாரி திரு.எம். வெங்கட்ராமன், திரு.கு.ராஜமாணிக்கம் எம்.எல்.ஏ.,ஜனப் எம்.எம்.பக்கர் எம்.எல்.சி. இன்னும் பலரும் இந்த மாபெரும் விழாவில் கலந்து கொண்டனர்.விழா நடக்கக் காரணம் திருமங்கலக்குடி வடக்கு மதார் பள்ளிவாசலின் பள்ளிக்கூடக் கட்டிடத்திறப்பு விழா வைபவமே. திருமங்கலக்குடியின் பெரிய பள்ளிவாசல் கட்டிடத் திறப்பு விழாவும் அன்றே நடை பெற்றது. விழாவில் அறிஞர் அண்ணு படத்தையும், மகாத்மா காந்தி படத்தையும் பிரமுகர்கள் திறந்து வைத்தனர். வான வேடிக்கை, விருந்து,அலங்காரங்கள், இசைக்கச்சேரி இவையெலாம் அந்த சிற்றூருக்கு என்றும் இல்லாத பொலிவை அளித்தது.

தாம் கல்வி கற்ற பள்ளிக்கூடத்திற்கு சிறந்ததொரு கட்டிடம் அமைக்க வேண்டும் என தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார் திரு. ஹறக் அவர்கள். அன்று மண் சுவரும் கீற்றுக் கொட்டகையுமாக இருந்த அந்தப் பள்ளிக்கூடம் இன்று உறுதியான சுவரும் ஓட்டுக்கூரையும் கொண்டு கம்பீரமாகக் காட்சியளிக்கிறது யாரால் என்றால் அதற்கு முக்கியமானவர் திரு. ஹறக் அவர்களே. திரு.ஹறக் லண்டனிலே சுறுசுறுப்பு மிகுந்த ஏர்ல்ஸ் கோர்ட்டிலே மலேசியா சிங்கப்பூர் உணவு விடுதியின் உரிமையாளர். திருமங்கலக்குடி பள்ளிக்கூடக் கட்டிட நிதிக்கு 350 பவுண் நன்கொடையாக லண்டனிலிருந்து அனுப்பி கட்டிடத்தைக் கட்ட வேண்டிய ஒழுங்குகளைச் செய்திருந்தார் திரு.ஹறக்.

திருமங்கலக்குடி கிராமம் விழாக்கோலம் பூண்டிருந்த சமயம்,லண்டனிலே தனது உணவு விடுதிக்கு வந்திருந்தோருக்கு பூரிப்புடன் விருந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள் திரு.ஹறக்கும் திரு.சம்சுதீனும். உணவு விடுதியில் வேலை பார்க்கும் மற்றவர்களது முகத்திலும் ஏதோ இனம் தெரியாத பூரிப்பு பரவியிருந்தது. பல ஆண்டு களாக மலேசியாவிலும், பின்னர் லண்டனிலும் வாழ்ந்து வரும் திரு.ஹறக்கும் திரு.சம்சுதீனும் தமது தாய் நாட்டில் தமது கிராமத்தில் தாம் கல்வி பயின்ற பள்ளிக்கூடத்தை நல்லதொரு நிலைக்குக் கொண்டு வந்தமை குறித்து அடைந் திருந்த இன்பத்தை எதற்கும் ஒப்பிட முடியாது என்றே கூறலாம்.

—சேரன்.

## தேர்வில் வெற்றி.

### ஆ.ஞானசேகரன்

காரைக்குடி மத்திய மின் இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஆ.ஞானசேகரன் அவர்கள் லண்டன் சிட்டி பல்கலைக் கழகத்தில் (மின் இரசாயனத்தொழிற்கல்வியில்) M.Sc., Electrochemical Technology தேர்வில் வெற்றி பெற்று தமிழகம் திரும்பியுள்ளார்.

## ஒன்றிய அரசாங்க இந்து சங்கங்களின் கூட்டணி

ஒன்றிய அரசிலுள்ள இந்து சங்கங்களின் கூட்டணியின் ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் லண்டனில் நடைபெற்றது. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ஆளும் சபை ஒன்றும் செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது. செயற்குழுவின் விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| போஷகர் | சுவாமி பூர்ணானந்தா (பாரத் சேவா சங்கம்) |
| தலைவர் | திரு சோ சபாபதிப்பிள்ளை (பிரித்தானிய சைவ மாமன்றம்) |
| உப தலைவர்கள் | டாக்டர் எம் சி சந்திரா (கரிபியன் இந்து சபை) |
| | திரு இந்திரநாத் (ஹிந்து சென்டர் லண்டன்) |
| செயலாளர் | திரு பி டி ரகுபீர் (கரிபியன் இந்து சபை) |
| பொருளாளர் | திரு பாலசிருஷ்ண அங்க்ரா (இல்பர்ட் விஸ்வ இந்து பரிஷத்) |
| குழு அங்கத்தினர் | திரு கே கோலி, திருமதி பா பிரசாத், திரு என் மங்கள், திரு என் எல் பிள்ளை, திரு கே சாஸ்திரி. |

The Only INDO-CEYLON Restaurant in FRANCE

When you are next in PARIS

VISIT

L'ETOILE DE L'INDE

12 Rue De Trevise
PARIS 9e
(Tel: Paris 770 7283)

To Promote your Sales & Service Successfully you must Advertise in

"LONDON MURASU"

*For Particulars write to:*

Publishing Manager, LONDON MURASU PIRASURAM,

8 ASHEN GROVE LONDON S.W. 19

01 – 946 3374

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் முரசு சிறுகதைப் போட்டி
மூன்றாவது பரிசுக் கதை

# - வருவாய் என நான் -
# தனிமையில் நின்றேன்!

(ஆ. ஞானசேகரன்)

லண்டன் பல்கலைக்கழக மாணவர் விடுதியான நர்த்வறாம்டன் வறாலில் 919 ம் எண் அறை.

"டக்..டக்..டக்" எனக் கதவு தட்டும் ஒலி.

"உள்ளே வாருங்கள்" என்றேன்.

"வறலோ மோகன், எப்படி இருக்கின்றீர்கள்?" என்ற புன்னகை மலர்ந்த சொல்லுடன் நுழைந்தார் செல்வி ஸெரினா. "நம் சர்வதேச மாணவர் சங்கத்திற் சொற்பொழிவாற்ற உலக விஞ்ஞான ஊழியர் சங்கத் தலைவர் பேராசிரியர் பர்வறாப் சம்மதித்து விட்டார்," என்றார்.

"மிக நல்லது ஸெரின், விரைவிலேயே காரியத்தை முடித்து விட்டீர்கள். உங்களைப் போன்று சிறந்ததோர் செயலாளரால் நம் சங்கம் சிறப்புற செயலாற்ற முடிகிறது."

"ஆவறா போதுமே உங்கள் புகழுரை. நான் நேற்று பேராசிரியர் பர்வறாப்பைக் கண்ட போது 'உங்கள் சங்கத் தலைவர் மோகனை நான் முன்பே அறிவேன்" என்றல்லவா கூறினார். அடிப்படையில் எல்லாவேலைகளையும் நீங்களே முடித்து விட்டு என்னைப்புகழுங்கள்... சுத்த புரட்டுக்காரர்."

"நான் புரட்டுக்காரனாகவே இருந்து விட்டுப் போகிறேன்; உங்களுக்கு கடிதமொன்று வந்திருந்ததே.. பார்த்தீர்களா?"

"பார்த்தேன் மோகன்.." தயக்கத்துடன் ஒலித்தது ஸெரினின் குரல்.

"யார் எழுதியது என நான் அறியலாமா?"

"அப்துல் எழுதியுள்ளார்."

"அப்படியா.." என் குரல் சோர்ந்து விட்டது.

"இதோ பாருங்கள் மோகன். உங்கள் குரலும் முகமும் ஏன் உடனே வாடிப் போக வேண்டும்? உங்கள் வழக்கமான சிரிப்பை நான் காண வேண்டும். எங்கே சிரியுங்கள் பார்ப்போம்.."

என்னால் சிரிக்காமலிருக்க முடியவில்லை. சிரித்த வண்ணமே ஸெரினின் கண்களை உற்று நோக்கினேன். அந்த கருநீலக் கண்கள்தாம் எவ்வளவு விசாலமானவை, எவ்வளவு ஆழமானவை, எவ்வளவு எழில் பொருந்தியவை.

"ஸெரின் உங்களுக்கு ஸிந்து எனப்பெயரிட்டிருந்தால் மிகப் பொருத்தமாயிருக்குமே."

"ஏன் அப்படி?"

"எங்கள் நாட்டிலே நதிகளின் பெயரால் பெண்களை அழைப்பது வழக்கம்—காவிரி, பொன்னி, நர்மதா, கங்கா, யமுனா போன்ற பெயர்கள். உங்கள் நாடான பாகிஸ்தானின் பெருநதி ஸிந்துவின் பெயரால் உங்களை ஏன் அழைக்கக்கூடாது?"

"நன்றாகக்கூப்பிடுங்கள். யார் வேண்டாமென்றார்கள் இன்று மாலை என் பெரிய தந்தையார் வறீஸேன் என்னைக் காணவருகிறார். என் பெரியன்னையாரும் வரலாம். உங்களைக் காண்பதில் மகிழ்ச்சியடைவார்கள். அவ்வேளை என்னறைக்கு வாருங்களேன்."

"கட்டாயமாக வருவேன், ஸெரின்" என நான் கூறிய பின் அவர் விடை பெற்றுச் சென்றுவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உள்ளம் அப்துலின் கடிதத்திலேயே வட்டமிட்டது.

அப்துல் ஸெரினுவின் நெருங்கிய உறவினர். அவர் மீகுந்த மதாபிமானமும் தேசப்பற்றும் நிறைந்த இளைஞர் எல்லாவற்றிற்கும் மேலாக, ஸெரினுவை மணக்க விரும்பு கிறார். அப்துலை மணப்பதா இல்லையா என ஸெரினுவினு லேயே முடிவுக்கு வர இயலவில்லை. அதற்கு நானும் ஓர் காரணமாயிருப்பேனே? சில வேளைகளில் அப்துலை மணக்க விரும்புவது போலும் சில வேளைகளில் விரும் பாதது போலும் பேசுவதாக எனக்குத் தோன்றும்.

ஸெரினு பெற்றோருக்கு ஒரே பெண். தந்தை பாகிஸ்தான் ராணுவத்தில் ஓர் தளபதி. பெற்றோர் வாழு மிடம் லாகூர்; அப்துல் இருப்பதும் அங்கு தான். ஸெரினின் பெரிய தந்தையான ஜனப் டாக்டர் ஸேன் லண்டனிலுள்ள பாகிஸ்தான் கைகமிஷனிலுள்ள ஓர் அதிகாரி. இவருக்கு மக்கட் செல்வமில்லை. தன் தம்பியின் ஒரே மகளை மேற்படிப்பிற்காக லண்டனுக்கு அழைத்து வந்துவிட்டார் அப்துல் பாகிஸ்தானில் ஆளும் கட்சிக்கு ஆதரவான தீவிர அரசியல்வாதி. ஸெரினுவின் மீதுள்ள பிரியத்தால் அவ்வப் போது கடிதமெழுதுவார்.

மாலை 5 மணியளவில் 4ம் மாடியிலிருந்த ஸெரினின் அறைக்குச் சென்றேன். ஜனப் டாக்டர் ஸேனும் அவ ரது மனைவியாரும் வந்திருந்தனர். இருவருமே மிக்க அன் புடன் பேசினார்கள். ஜனப் டாக்டர் ஸேன் கூறினார்: "1944ம் ஆண்டு நான் அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தில் விரி வுரையாளராகப் பணியாற்றினேன். என் மனைவி பிறந்த ஊரும் டெல்லிக்கு அருகிலிருக்கும் சிறு கிராமந்தான். இந் திய சுதந்திரப் போராட்டத்திலே முஸ்லீம் லீக் சார் பாகநானும் பங்கெடுத்துக் கொண்டேன். அக்காலம், இந்துக்களும் முஸ்லீம்களும் இணைந்து ஆங்கிலேயருக்கு எதி ராக நின்ற காலம். அந்த இணைப்பும் உறவும் என் றென்றும் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்"

அவரது சொற்கள் இதயத்தின் ஆழத்தினின்றும் வந்தவை என்பதை அவர் குரல் உணர்த்திற்று.

"அடுத்து வரும் புதன் கிழமையன்று ஸெரினுவின் பிறந்த நாள். சிறியதொரு தேநீர் விருந்துக்கு எங்கள் இல்லத்திலே ஏற்பாடு செய்துள்ளோம். நீங்களும் வர வேண்டும்" என்றார் பெரியன்னையார்.

"அழைப்பிற்கு நன்றி, வருகிறேன்" என்றேன்.

கென்சிங்டன் பூங்காவினருகே இருந்தது திரு டாக்டர் ஸேன் தம்பதியரின் இல்லம். தேநீர் விருந்துக்கென்று பாகிஸ்தான் கைகமிஷனின் அலுவலகத்தார் சிலர் வந்திருந்தனர். அன்று ஸெரின் மெல்லிய நீல நிற பஞ்சாபி உடை அணிந்திருந்தார். பொங்கி வரும் பெருநிலவு போன்ற தோற்றம். நான் அன்பளிப்பாக கொண்டு சென்ற பார்க்கர் பேனாவையும் ரோஜா மலர்களை யும் அவருக்கு தந்தேன்.

அன்றிரவே ஸெரின் விடுதிக்குத் திரும்ப விரும் பியதால் இரவு பத்து மணியளவில் இருவரும் புறப்பட் டோம்.

"கைரட் பார்க் வழியாக நடந்துசெல்லலாமா மோகன்?"

"போகலாம் ஸெரின்!"

நடந்து சென்ற வேளை ஏனோ ஸெரின் அமை தியாக சிந்தனையுடன் சிறிது கலவரத்துடன் காணப்பட் டார்.

"என்ன சிந்தனை?" என்றேன்

"என் பெரிய தந்தையார் கூறிய செய்திதான்"

"என்ன செய்தி?"

"இழக்கு பாகிஸ்தான் நிலவரம் உங்களுக்குத்தெரியு மே! மேற்கு பாகிஸ்தான் ராணுவம் அங்குள்ளது. கிழக்கு பாகிஸ்தான் விடுதலை பெற்று பங்களா தேஷாக மாற இந்தியா உதவப் போகிறதாம். இதனால் விரைவில் இந்திய —பாகிஸ்தான் போர் மூளும். பெருமளவில் இப்போர் மூளும்"

உள்ளூர எனக்குத் திகிலேற்பட்டது. என்ன பதில் கூறுவதென்று புரியவுமில்லை. ஸெரின் மேலும் தொடர்ந்தார்.

"என் தந்தை ராணுவ தளபதியென்பதை நீங்கள் அறிவீர்களல்லவா, அவர் காஷ்மீரில் சம்ப் பள்ளத்தாக்குப் போர்முனைக்கு அனுப்பப்பட்டு விட்டாராம். என் அன்னை யார் கடிதமெழுதியுள்ளார்கள்."

ஒரு இளம் பெண்ணின் பிறந்த நாள் விழாவிற்கு வரவேண்டிய செய்திகளா இவை? அன்பான அச்சின்னஞ் சிறு குடும்பத்தை எண்ணிப் பார்த்தேன். போர் முனையில் தந் தையார்: வீட்டிலே தனியே தாய்; ஒரே மகள் லண்டனில்.

"எனக்கு இங்கிருக்கப் பிடிக்கவில்லை; என் தாயா ரிடம் போக விரும்புகிறேன் மோகன்"

"விகற்பமாக எதுவும் நேராது ஸெரின். தைரிய மாக இருங்கள். டிஸம்பர் மாதம் பிறக்கப் போகிறது... மார்ச் மாதம் உங்கள் தேர்வுகள் முடிந்து விடுமே."

"நான் இங்கிருக்க வேண்டுமென்ற அவசியத்தால் இப்படிக் கூறுகிறீர்கள். எத்தனை நாட்கள் நான் இப்படி இருப்பேன். என்றாவது போக வேண்டியவள் தானே! ஏன் நீங்கள் இந்தியா திரும்பப் போவதில்லையா?"

"போகத்தான் வேண்டும். ஆனால் அப்படிப்போகும் நாளில் உங்களையும் என்னுடன் அழைத்துப்போகும் பெரு வாய்ப்பு கிட்டாதா ஸெரின்?" தயக்கத்துடன் வெளி வந்தன என் வார்த்தைகள்.

"மோகன் உங்கள் உள்ளத்திலுள்ளதை இன்று வாய் விட்டுக் கூறி விட்டீர்கள். உங்கள் உள்ளம் எனக்கு முன்பே தெரியும். நீங்கள் அற்புதமான மனிதர். ஜாதி, மதம் மொழி வேறுபாடுகளையெல்லாம் கடந்து பரந்த உள்ளத் தடன் விரிந்த நோக்குடன் உயர்ந்து நிற்கிறீர்கள். சாதார ணமான ஒரு புறாவால் வானத்தினுயரே பறக்கும் கருடனு டன் சேர்ந்து பறக்க முடியுமா?"

"நீங்கள் புறாவுமில்லை. நான் கருடனுமில்லை. இரு வரும் மனிதர்கள் தானே. உங்களை என் வாழ்க்கைத் துணை யாகப் பெற முடிந்தால் என் வாழ்வு எவ்வளவு நிறைவுற்று மகிழ்ச்சியாயிருக்கும் தெரியுமா!"

ஸெரின் பெருமூச்சு விட்டார். மங்கலான ஒளியில் இருவரும் தனியாக ஆலை அலை பாயும் உள்ளங்களுடன் நடந் தோம். வானத்தை நிமிர்ந்து பார்த்தேன். எரி நட்சத்திர மொன்று கீழ் வானத்தில் எரிந்து விழுந்தது.

போர் துவங்கி விட்டது. காஷ்மீர் சம்ப் பகுதி யில் பாகிஸ்தான் படைகள் முன்னேறத் துவங்கின. ஓரிரு நாட்களாக ஸெரினைக் காணவில்லை. வழக்கமாக இரு வரும் ஒன்றாக உணவருந்துவோம். இப்போது நான் தனியே உண்ணவேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் அறையும் பூட்டி இருந்தது. அவரது பெரிய தந்தையார் இல்லம் சென்றிருக்க லாமோ?

கென்சிங்டன் பூங்காவிலே அவர்கள் வீடு சென்று தட்டினேன்; பெரியன்னை அவர்கள் கதவைத் திறந்தார்கள்.. ஆழ்ந்த துயரம் அவர்கள் முகத்திலே படர்ந்திருந்தது. "ஸெரி னுக்கு என்ன?"

"ஸெரினு இங்கிருக்கிறாளா?"

"ஆம்... ஆனால்..."

"ஆனால்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸெரினுவின் தந்தை சம்ப் பள்ளத்தாக்குப்போ ரிவில் வீர மரணமடைந்து விட்டதாக செய்தி வந்தது."

பேரிடி விழுந்தது போலிருந்தது எனக்கு. ஸெரினின் அன்புத்தந்தை மரணமடைந்து விட்டார். நாட்டைக் காக்கும் நற்பணியில் கொல்லப்பட்டுவிட்டார். நாடுகளை யார் படைத்தார்கள்? கடவுளா படைத்தார்? இல்லையே —மனிதன்தான் படைத்தான்! படைத்தான்! இனத்தால் மொழியால் மதத்தால் வேறுபாடு கண்ட மனிதஇனம் தன்னைத்தானே பிரித்துக்கொண்டது. மூவாயிரம் ஆண்டு களாக நாம் நாகரிகத்துடன் வாழ்வதாக வரலாறு. ஆயினும் நாம் உண்மையில் பண்பட்டு விட்டோமா? மனிதரை மனிதர் மதிக்கக் கற்றுக் கொண்டோமா? இல்லையே! மதங்கள் மனிதர்களுக்கு அன்பையும் பண்பையும் போதிக்கப் பிறந்தன. ஆனால் அவைகளால் எவ்வளவு போராட்டங்கள் நிகழ்ந்து விட்டன! அறிவினைப் பெருக்க துடித்து நிற்கும் நம் இனம் அன்பையும் பண்பையும் எவ்வளவு சுலபமாக மறந்து விடுகிறது.

"ஸெரினுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களைக் கூறுங்கள்" எனக்கூறித் திரும்பிவிட்டேன்.

மறுநாள். பின்னிரவில் ஸெரின் என்னறைக்கு வந்தார். சிறிது நேரம் எங்களிருவராலும் ஒன்றும் பேச முடியவில்லை. பொங்கும் துயரம் கண்ணீராய்ப் பெருகுவதையும் அடக்க முடியவில்லை.

"நாளை இரவு நாடு திரும்புகிறேன் மோகன்; வருமாறு அம்மா டெலிபோனில் கூறினார்கள்."

"நீங்கள் செல்வது உங்கள் அன்னைக்குப் பெரும் ஆதரவு ஸெரின்; அவர்களுக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களைக் கூறுங்கள். பிணைபட்டு நிற்கும் நம் இரு நாடுகளும் விரைவில் ஒற்றுமையை நாடும் என நம்புவோம். நீங்கள் ...திரும்பி வருவீர்களா..?"

"என்னால் கூற இயலாது. அநேகமாக வர இயலாது எனத்தோன்றுகிறது. என் அன்னைக்கு வேறு யார் துணை?"

கட்டியிருந்த மனக்கோட்டைகள் சரிந்து விட்டன. என்னால் நிற்க முடியாமல் நாற்காலியில் சாய்ந்தேன். யாருக்கு யார் எது வரை துணை? பிரிவின் கரு நிழலில் கண்ணீருக்கு கண்ணீர்தான் துணை.

டெல்லி விமான நிலையம். ஸெரின் சலன மற்ற முகத்துடன் காணப்பட்டார். அவரது பெரிய தந்தையாரும் தாயும் வந்திருந்தனர். ஸெரின் என்னிடம் விடை பெறும் போது என் கண்களை உற்று நோக்கினார் அங்கே தேடுவதற்கு இனி என்ன இருக்கிறது. கண்கள் கண்ட கனவுகள் தான் கண்ணீராய்க் கரைந்து விட்டனவே.

"உங்களுக்காக நான் காத்துக் கொண்டிருப்பேன் ஸெரின்; எவ்வளவு நாட்களானாலும் சரி. கடிதமெழுதுங்கள்; என் இந்திய முகவரியும் உங்களுக்குத் தெரியும்."

ஸெரினின் உதடுகள் துடித்தன. கண்கள் இறுக முடிக் கொண்டன. வலிய வரவழைத்துக்கொண்ட ஒரு புன்னகை, வேதனையினூடே மலர்ந்தது. அந்த ஒரு விநாடியிலே ஸெரினுடன் கழித்த ஒன்பது மாதங்களின் இனிமையும் பளீரென மின்னலாக ஒளி வீசிற்று.

"சென்று வருகிறேன் மோகன்; இறைவனை வேண்டிக் கொள்ளுங்கள்."

சரித்திரத்திலே புத்தேடுகள் மலர்ந்தன. பங்களாதேஷ் பிறந்தது. இந்திய பாகிஸ்தான் நல்லுறவுக்காக இரு நாடுகளும் முயற்சிகள் எடுத்தன. நாட்கள் வாரங்களாய் மாதங்களாய் மறைந்தன. ஆனால் ஸெரின் ஒரு கடிதமும் ஏன் எழுதவில்லை?

நானும் தேர்வுகள் முடிந்தபின் தாயகம் திரும்பி விட்டேன். முன் பணியாற்றிய டெல்லி தேசிய விஞ்ஞான ஆய்வு கழகத்திலேயே திரும்பவும் பணியிலமர்ந்தேன். ஒரு நாள். ..லாகூர் முத்திரையுடன் கூடிய கடிதமொன்று வந்தது நடுங்கும் கரங்களுடன் பிரித்தேன்; விரிந்தது ஓர் திருமண அழைப்பிதழ். மணமக்கள்: "செல்வி ஸெரின்—ஜுல்பிகான்." என் இதயமே நின்று விட்டது போன்ற உணர்வு! மும்தாஜின் கல்லறையில் ஷாஜஹானின் பொறித்திருக்கும் வரிகள் நினைவிலெழுந்தன. "இறைவா, தாங்க முடியாத துன்பங்களை எங்களுக்குத் தராதீர்கள்". உடனிருந்த கடிதத்தை பிரித்துப் படித்துப் பார்த்தேன்.

மோகன்,

என்னால் கங்கையாய் யமுனையாய் சிந்துவாய் இருக்க முடியவில்லை; சாதாரண ஸெரினாவாகத்தான் இருக்க முடிந்தது. இந்தியரொருவரை மணந்து இந்தியாவுக்குச்சென்று நான் வாழ்க்கை நடத்த முடியுமென்று என் அன்னையும் உற்றார் உறவினரும் எண்ண இயலவில்லை.

என் தாயைப் பிரிந்து நான் வர இயலாது. உங்களைப் போன்றோர் முயற்சியால் நம் நாடுகளிடையே உள்ள பகைமை உணர்வு மறைந்து ஆயிரமாண்டு நட்புறவு மலரட்டும் என இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

உங்கள் பொன்னை வாழ்வுக்காக வேண்டும்.

உங்கள் தங்கை

ஸெரின்


**MADRAS INDIA**
**RESTAURANT**

*South Indian Food Speciality*
Open 12 to 3 p.m.
and
6 p.m. to midnight

325 GRAY'S INN ROAD, W.C.1
100 yards from Kings Cross Station

*Speciality:*
IDDLY
VADAI
MASALA DOSAI
SAMBAR
RASAM, etc

Res: 01-837 4544

**D. C. & C. S.**

Planners
Builders
Plumbers and
Heating Consultants

Contract Property Maintenance
for Estate Agents

104 Dora Road
Wimbledon
S.W.19

Telephone
01-946 7890



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மியூனிக்கில் நடைபெறும் சர்வதேச முகாமைத் துவ மாநாட்டில் கலந்துகொள்கின்றார் இந்திய தொழிலதிபர் திரு ஜி ஆர் தாமோதரன் அவர்கள்.

லண்டன் சிட்டி பல்கலைக்கழகத்தில் எம் எஸ்ஸி பட்டம் பெற்றுள்ள திரு. ஆ ஞானசேகரன் அவர்கள் தமிழகத் தின் முதல் மின் இரசாயன தொழிற் கல்வி நிபுணர் ஆகின்றார். இவர் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளர்.



லண்டன் முரசு சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மாஸ்கோ மாணவர் திரு எம் ஐ ஜவஹிர். 21 வயது நிரம்பிய இவரின் பூர்வீகம் இலங்கையில் மன்னார் வட்டத்தைச் சேர்ந்த எருக்கலம்பிட்டி ஆகும்.

The Archbishop of Canterbury at the Church of South India Service held recently at St Paul's Cathedral, London. The Acting Moderator of the Church of S.India Rt Rev Ananda Rao Samuel conducted the Service.

Mr Y B Chavan, Finance Minister of India, being received by Mr Anthony Barber, Britain's Chancellor of the Exchequer, at the Commonwealth Finance Ministers' Conference held in London recently.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழா காணும் சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ து சுந்தர வடிவேலு அவர்கள்.

ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணியின் தலைவர் திரு செல்வநாயகம் அவர்கள் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து தனது நாடாளுமன்ற பதவியினின்றும் ராஜினமா செய்துள்ளார்.

மலேசியாவின் தமிழ்த் தேசிய தினசரியான தமிழ்நேசன் பத்திரிகையின் ஆசிரியர் திரு முருகு சுப்பிரமணியன் அவர்களின் புதல்வர் திரு செல்வம் (சிங்கப்பூர் வானொலியின் செய்திப்பகுதி துணை ஆசிரியர்) அவர்கட்கும், நாட்டரசன்கோட்டை திரு எஸ்.பி.ராமநாதன் அவர்களின் புதல்வி செல்வி சந்திரா அவர்கட்கும் 10.9.72 அன்று தமிழகத்தில் நாட்டரசன்கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ள வ.உ.சியின் சிலை.

கன்னியாகுமரி ரயில் பாதை அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர், முதல்வர், ரயில்வே அமைச்சர், காமராஜர் ஆகியோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய்.. யாரங்கே...?
"இதோ வந்து விட்டேன் வரிசூர்.! உங்கள் அடிமை..!"
"போய் சிறையில் இருக்கும் அந்த அழகியை அழைத்து வா"
"மன்னியுங்கள் வரிசூர்..சித்தோட் அரசனின் மனைவியான ராணி பத்மினியைத்தானே சொல்கிறீர்கள்..?
"ஆமாம்.. நிற்காதே.. காமத்தீயிலே என்னுடல் வேகு முன்னல் அழைத்து வா அவளை..!"

* * *

"வா அழகியே வா.. மாபெரும் முகலாயப் பேரரசின் சக்கரவர்த்தி,பகைவர்கள் கனவில் கூட நடுங்கும் வீரன்.! மன்னன் ஷாஜர்ஷாவின் கருத்தைக் கொள்ளை கொண்ட பெண்ணே.. வா இப்படி !! காலம் வீணாகிறது.காதல் கரை புரண்டோடுகிறது!!காக்க வைக்காதே கண்ணே"

"யுகங்கள் ஓரிரண்டு வந்து போனாலும் என் மனதை ஒரு நாளும் நீ அடைய முடியாது. என் பதி ரகுவீரன் இறந்த அன்று நான் பெருக்கிய கண்ணீர் வெள்ளம் இன்னும் வற்றவில்லை.கோழைத்தனமாகப் போரிட்டு என் நாயகனை பலி வாங்கிய நீ இன்று என்னையே பலி கேட்கிறாய்.சீச்சீ! நீயும் ஒரு மன்னன்..உனக்கும் ஒரு சாம்ராஜ்யம்....! வெட்கக்கேடு.!"

